**கவனிக்க.**- *2007.06.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி (IVஆ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1501 - 2007 ජූනි 08 වැනි සිකුරාදා - 2007.06.08

*1501 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 456 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 460 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூன் 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூன் 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்

25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கக் கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்கான அட்டவணையில் உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்கச் சபை உத்தேசித்துள்ளது.

2. ஆதலின், சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் கீழ்க்கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25 (1), 26 (1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். டபிள்யு. குணதாச,
செயலாளர்,
கடன் இணக்கச் சபைத் திணைக்களம்.

கடன் இணக்கச் சபைத் திணைக்களம்,
இல. 428/11, வீர டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2007, மே 16.

### அட்டவணை

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (1) 40361 | திருமதி தெஹிவல லியனகே சாகரிகா, இல. 424/1, தங்கொல்ல வீதி, பகல தல்துவ, அவிசாவளை | திருமதி முதலி மஹீபால அப்புஹாமிலாகே ரூபவதீயின் மரபுரிமையாளர்கள் :<br>(1) திரு. பீ. டியுடர் திசேரா, இல. 441/2, பிரகதிபுர, புவக்பிட்டிய<br>(2) திருமதி முதலிகே தோன தெவங்கனீ சம்பிகா வல்பொல, இல. 64, மாலிகாவ மாவத்தை, சீதாவக, அவிசாவளை<br>(3) திருமதி சரோஜா ரசாங்கனீ வல்பொல, இல. 3, நகரசபை விடுதிகள், சீதாவக வீதி, அவிசாவளை<br>(4) திரு. வசந்த வல்பொல, நுகேவத்த, அவிசாவளை |
| (2) 40484 | திரு. பலப்பிட்டிய லியனகே காமினீ, இல. 91ஏ. பராக்கிரம வீதி, தங்காலை | திரு. இஷான் கயா ஸ்ரீ செல்லஹேவா, "காந்த", கதுருபொக்குண வீதி, தங்காலை |
| (3) 40550 | திரு. தென்னகோன் முதியன்சேலாகே சோமசிறி, கந்த வீதி, தல்கஹவத்த, கரன்தெனிய | திருமதி களுவாதேவ இந்திராவதீ, கட்டுகனத்த, கரன்தெனிய |

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (4) 40551 | திருமதி சிங்காதிபதி மஞ்சநாயக்க அப்புஹாமிலாகே ஸ்ரீயானி மஞ்சநாயக்க, 604/53, 8 ஆம் ஒழுங்கை, மாலிகாவத்த, கிரிந்திவெல | திரு. வலிமுனிகே, லீல் குமுது தம்மிக ரணதுங்க, 28, மில்லதே கிரிந்திவெல |

6-136

---

## மாத்தறை தொட்டமுனை பொஸொம் பெரஹரா

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் 2007 ஆம் ஆண்டின் பொஸொன் பெரஹரா 2007, யூன் மாதம் 30 ஆந் திகதி நடைபெறும் என பயண யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (175 ஆம் அத்தியாயம்) 1959, நவெம்பர் 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 11959 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளின் 10 ஆம் பிரிவின்கீழ் அறியத்தருகிறேன்.

துசித பி. வணிகசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

பிரதேச செயலாளர் காரியாலயம்,
மாத்தறை,
2007, மே 18.

6-141

---

## 1952 ஆம் ஆண்டின் திஸ்ஸமஹாராமை யாத்திரிகைச் சட்ட பிரமாணங்கள்

1952 ஆம் ஆண்டின் திஸ்ஸமஹாராமை யாத்திரிகைச் சட்டப் பிரமாணத்தின் 3 ஆம் சரத்தின்படி திஸ்ஸமஹாராமை பிரதேச செயலாளரான திரு. மஹேஷ் கம்மம்பில ஆகிய நான், பின்வரும் காலப்பகுதியை திஸ்ஸமஹாராமை யாத்திரிகைச் சட்டப் பிரமாணங்கள் நடைமுறைப்படுத்தும் காலமாக பிரகடனப்படுத்துகிறேன்.

2007 ஆம் ஆண்டின் பொசொன் வைபவம் 2007, யூன் 24 ஆந் திகதியிலிருந்து 2007, யூலை மாதம் 01 ஆந் திகதிவரையாகும்.

எம். எல். கம்மம்பில,
பிரதேச செயலாளர்,
திஸ்ஸமஹாராமை.

பிரதேச செயலகம்,
திஸ்ஸமஹாராமை,
2007, மே 16,

6-167

---

## கரையோரம் பேணல் திணைக்கள கட்டளைச் சட்டத்தின் 16 ஆவது பிரிவின் 2 (ஆ) உபபிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

கருக்குப்பன்னவில் தீர்மானிக்கப்பட்ட சிறிய சொகுசு ஹோட்டல் (Small Luxury Hotel) செயல் திட்டம்

சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை

1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் கட்டளைச் சட்டத்தின் 16 (1) பிரிவின் சரத்துக்கமைய கொழும்பு 03, புனித அந்தோனி மாவத்தை, இல. 70, "லக்கி பிளாஸா", 2 ஆம் மாடி, லாப்ஸ் லேஷர் லிமிட்டெட் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும்.

"தீர்மானிக்கப்பட்ட சிறிய சொகுசு ஹோட்டல் செயல் திட்டம்" சம்பந்தமாக சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை பொதுமக்களின் பார்வைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாள்தோறும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2007.06.11 ஆந் திகதி தொடக்கம் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களில் பார்வையிட முடியாது.) :

| | |
|---|---|
| 1. கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு | புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 |
| 2. கரையோரம் பேணல் திணைக்களம் | புதிய செயலகம், 4 ஆம் மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10 |
| 3. வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை | மாகாண சபை கட்டிடத் தொகுதி, மாளிகாவ, குருநாகல் |
| 4. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | "செத்சிறிபாய", பத்தரமுல்ல |
| 5. இலங்கை சுற்றுலா சபை | 80, காலி வீதி, கொழும்பு 03 |
| 6. மாவட்ட செயலாளர் அலுவலகம் | புத்தளம் |
| 7. பிரதேச செயலாளர் அலுவலகம் | ஆராச்சிக்கட்டு |
| 8. பிரதேச சபை | ஆராச்சிக்கட்டு |
| 9. மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் | மஹவெவ |
| 10. கரையோரம் பேணல் திணைக்களம் | பிரதேச அலுவலகம், சுங்க வீதி, நீர்கொழும்பு |

இந்த தீர்மானிக்கப்பட்ட சிறிய சொகுசு ஹோட்டல் செயல் திட்டத்தைச் செயற்படுத்தும்போது ஏற்படும் சுற்றாடல் தாக்கம் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை சம்பந்தமாக பொதுமக்கள் ஏதேனும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால், அதனை 2007.06.11 ஆந் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் கரையோரம் பேணல் திணைக்களப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

(பொறியியலாளர்) எச். என். ஆர். பெரேரா,
கரையோரம் பேணல் பணிப்பாளர்.

கரையோரம் பேணல் திணைக்களம்,
4 ஆம் மாடி,
"புதிய செயலகம்",
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

தொலைபேசி இல. : 011- 2449754, 011-2387922, 011-2472623
தொலைநகல் இல. : 011- 2438005, 011- 2472623.

6-182

---

## பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச் சட்டம்

### 5 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

110 ஆவது அத்தியாயமான பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அரசாங்க நிருவாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் தொடர்பான அமைச்சர் கரு ஜயசூரிய ஆகிய நான், 1935, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிய இல. 8146 கொண்ட வர்த்தமானப் பத்திரிகையின் அனுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை அதன் மத்திய மாகாண, கண்டி மாவட்டம் தலைப்பின் கீழ்-

பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவிற்குள் :

ஹாரிஸ்பத்துவ பள்ளேகம்பஹ தெற்கு 02 பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பிரிவிற்குரிய இல. 14 எனும் விடயத்திற்கு பதிலாக இங்குள்ள "அ" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தினை பதிலீட்டு செய்வதாலும்

அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் :

ஹாரிஸ்பத்துவ பள்ளேகம்பஹ தெற்கு 02 பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பிரிவிற்குரிய இல. 14 எனும் விடயத்தினை உடனடுத்து இங்குள்ள "ஆ" எனும் புதிய விடயத்தினை சேர்த்துக்கொள்வதாலும்

2007.04.18 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இவ்வறிவித்தலினால் திருத்தஞ்செய்கிறேன்.

கரு ஜயசூரிய,
அரசாங்க நிருவாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
2007, ஏப்பிறல் 18.

**கண்டி மாவட்டம்**

*பிரதேச செயலாளர் பிரிவு - பூஜாபிட்டிய*

***அட்டவணை "அ"***

*'ஹரிஸ்பத்துவ பள்ளேகம தெற்கு இல. 02' இல் பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட கிராமங்கள் உள்ளடக்கப்படுகின்றன :-*

இருபக்க முள்ளேகம களுவான வீதி
திவானவத்தகம
கஹவத்தகம
களுவான குடியேற்றம்
களுவானகம
கோப்பிவத்த குடியேற்றம்
முள்ளேகம

*பிரதேச செயலாளர் பிரிவு - அக்குரணை*

***அட்டவணை "ஆ"***

*'ஹரிஸ்பத்துவ உடகம்பஹா இல. 02' இல் பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட கிராமங்கள் உள்ளடக்கப்படுகின்றன :-*

அக்குரனாகம
போசங்ககம
தொடன்கொல்ல
கசாவத்த
மாச்சினாகம
பள்ளேவெளிகெடிய
பள்ளியகொட்டுவ
பீளிகரகம
உடவெளிகெடிய

6-191

---

**திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்வதற்கான தேவாலயம் பதிவு செய்தல்**

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின்கீழ் இலங்கைப் பதிவாளர் நாயகம், லபுகம கருணாநாயக்க ரத்னசிறி ஆகிய நான், பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டுத் தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்யும் நோக்கங்களுக்காக முறைப்படி பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன் :-

| இல. | பதிவு செய்யப் படும் திகதி | விபரம் | இடம் | மதகுரு அல்லது சொந்தக்காரர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் | கட்டிடம் எந்த மதத்திற்காகப் பதிவு செய்யப் படுகிறதோ அந்த மதம் |
|---|---|---|---|---|---|
| 1400 | 2007.04.04 | த பென்டி கோஸ்டல் அசெம்பிளி ஒப் ஸ்ரீ லங்கா | வெலிவேறிய | போதகர் ஆர்.எச்.எம். சிறிவர்த்தன | கிறிஸ்தவம் |

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கொழும்பு 11.
2007, மே 15

6-192

A3-B079505

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பணிப்பாளர்கள் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென் தீர்மானம் அறிவிக்கப்படுகின்றது :-

"ராகம, ஹீன்கெந்த, 526 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த எந்திரியன்வலகே திலிப் குமார எதிரிசிங்க கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். டீ. வீரசேகர அத்தாட்சிப்படுத்திய 2005 சனவரி 31 ஆந் திகதிகொண்ட 182 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் அவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள்கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பொன்றாக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆனத்தையும் வளவுகளையும் கொழும்பு 1, யோர்க் வீதி, 76 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் சார்பில் (இதனகத்துப்பின்னர் 'வங்கி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்,

மேற்படி எந்திரியன்வலகே திலிப் குமார எதிரிசிங்க மேற்படி முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 02.03.2006 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின்மீது முப்பது இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து இருநூறு ரூபா அறுபத்தெட்டு சதம் (ரூபா 30,52,200.68) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,

முப்பது இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து இருநூறு ரூபா அறுபத்தெட்டு சதத்தையும் (ரூபா 30,52,200.68) 02.03.2006 ஆந் திகதியன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள தவணைக்கடன் ரூபா இருபத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்றுப் பதின்மூன்று ரூபா இருபத்துமூன்று சதத்தின்மீது (ரூபா 29,56,213.23) 02.03.2006 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 19% ப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும்அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பைச்சேர்ந்த திரிவங்க அன்ட் சேனநாயக்க ஆக்ஷனியஸ் திரு. திரிவங்க சேனநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்று மஹாரகம நகர சபை எல்லைகளுக்குட்பட்ட மஹாரகம கிராமத்தில் அமைந்துள்ளதும் நாகஹாவத்த வீதி, 139 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான நாகஹாவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஜே. நாணயக்கார தயாரித்த 06.09.1967 ஆந் திகதி கொண்ட 1290 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 8 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கன் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 8 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : இதன் துண்டு 9 மற்றும் 23 ; கிழக்கில் : இதன் துண்டு ஏ ; தெற்கில் : நாகஹாகனத்த வழியாக ஒதுக்கப்பட்ட காணி ; மேற்கில் : இதன் துண்டு பீ என்பன அமைந்துள்ளன. மேற்படி 1290 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இருபது தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20.5பே.) இது கல்கிசை மாவட்ட காணிப்பதிவகத்தில் எம். 908/247 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி துண்டு 8 மறு நிலஅளவை செய்யப்பட்டு பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

மஹாரகமயில் அமைந்துள்ளதும் நாகஹாவத்த வீதி, 139 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான நாகஹாவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சமரநாயக தயாரித்த 14.06.2001 ஆந் திகதி கொண்ட 7374 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 8 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 8 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : 1290 ஆம் இலக்க வடைபடத்திலுள்ள துண்டு 9 மற்றும் 23 ; கிழக்கில் : 1290 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு ஏ இப்பொழுது பொது வீதி ; தெற்கில் : நாகஹாகனத்த வீதி ; மேற்கில் : 1290 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு பீ என்பன அமைந்துள்ளன. மேற்படி 7374 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இருபது தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20.5பே.) அல்லது 0.0518 ஹெக்டேயர்.

பின்வரும் காணியிலும் அதன்மீதும் வழி உரிமைகளையும் ஏனைய சார்புடைய இதனையொத்த பொது உரிமைகளையும் சேர்த்து :-

மேற்படி மஹாரகம கிராமத்தில் அமைந்துள்ளதும் நாகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து 1290 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு ஏ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (20 அடி அகல வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணி இப்பொழுது பொது வீதி). மேற்படி துண்டு 8 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : பத்திரகே கும்புற நெல் வயல் மற்றும் துண்டுகள் 18 முதல் 21 வரை மற்றும் டீ ; கிழக்கில் : பத்தரகே கும்புற நெல் வயல் ; தெற்கில் : துண்டுகள் 10 முதல் 15 வரை 22 மற்றும் 23, நாகஹாகனத்த வீதி வழியாக ஒதுக்கப்பட்ட காணி ; மேற்கில் : துண்டுகள் 17, 22, 23 மற்றும் 8 என்பன அமைந்துள்ளன. 1290 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரபப்பளவு ஒரு றூட் இரண்டு தசம் ஐந்து சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 2.50பே.) இது கல்கிசை மாவட்ட காணிப்பதிவகத்தில் எம். 2522/61 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

தேஜ சில்வா,
கம்பனிச் செயலாளர்.

இல. 76, யோர்க் வீதி,
கொழும்பு 01.

6-162

**ருஹுுண அபிவிருத்தி வங்கி - கந்தர**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ருஹுுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கியின் சட்டத்தின் கீழும் நிதிச் சபையினாலும் வெளியிடப்பட்டுள்ள 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அமைக்கப்பட்டுள்ள ருஹுுண அபிவிருத்தி வங்கிக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2002.08.07 ஆந் திகதிய நடாத்தப்பட்ட ருஹுுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது :-*

*"ருஹுுண அபிவிருத்தி வங்கியின் பெயரில் மாத்தறை பிரசித்திபெற்ற நொத்தாரிசு திருமதி ஸறோஜனி விக்ரமசிங்ஹ என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 1998.06.10 ஆந் திகதியும் 1142 ஆம் இலக்கமும் கொண்ட ஈட்டுமுறியின் கீழ் வரவேண்டிய நிதி செலுத்துதல் தெவிநுவர, லய்ட்ஹவுஸ் வீதி, ஸெனஸுும என்ற விலாசத்தில் வசிக்கும் நாராதொட ஹேவகே சுனில் என்பவரால் கைவிடப்பட்டு உள்ளதன் காரணமாக ; 2002.08.07 ஆந் திகதிக்கு குறிப்பிட்ட ஈட்டுமுறியின் கீழ் ரூபா 4,02,953.12 (நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து மூன்று தசம் பன்னிரண்டு) ரூபாவும், செலுத்தாது மீதியாயுள்ள ரூபா 3,40,600 ஆரம்ப கடன் தொகைக்கு 2002.08.07 ஆந் திகதி முதல் வருடாந்தம் நூற்றுக்கு இருபத்தாறு (26%) வீதமான மேலும் சேரக்கூடிய வட்டியுடன் ருஹுுண அபிவிருத்தி வங்கிக்கு வரவேண்டியதும் கடனாக இருந்து வருவதுமான, பூரணமான வங்கியின் பூரணமாக ஈட்டுமுறி இல. 1142 னால் ஈடாக வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிட்ட நிதி அல்லது விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தின் போதும் செலுத்தாது மிகுதியாயுள்ள அதில் எந்தவொரு பகுதியும், அதற்காகச் செலுத்த வேண்டிய வட்டியும் விளம்பரம், விற்பனை என்பவற்றுக்காக ஏற்பட்ட செலவுகளையும், 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக் கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆவது பிரிவின்படி வங்கியினால் செய்யப்பட்டுள்ள மற்றும் செலவுகளையும் அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு பூரணமான வங்கியின் பூரணமான ஈட்டுமுறி இல. 1142 இனால் ஈடாக வைக்கப்பட்டு உள்ள கீழே குறிப்பிட்டுள்ள ஆதனம், உரிமைபெற்ற ஏலவிற்பனையாளர் மாத்தறை வல்கமயில் வசிக்கும் திரு. கனேவெல பதிரணகே ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று வங்கியின் பணிப்பாளர் சபையினால் இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."*

**ஈடாக வைக்கப்பட்டுள்ள ஆதனம் பற்றிய விவரணம்**

*தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் வெல்லப்படபத்து தெவிநுவர கிராமத்தில் தெவிநுவர பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள வரிமதிப்பிலக்கம் 224 உடைய மாத்தறை, ரிக்வெசட் நீதிமன்றத்தில் ஸி. ஆர். 4674 ஆம் வழக்கில் கோவைப்படுத்தப்பட்டுள்ள 2375 ஆம் இலக்க வரைபடத்தினால் அளந்து அமைக்கப்பட்டுள்ள ஏ, பி எழுத்துக்களைக் கொண்ட துண்டுகளினாலான குருவே பதிஞ்சிவ ஹிடியவத்த எனும் காணியின் எல்லைகளாக வடக்கில் : அபரன் லொகுரால வசிக்கும் பதிஞ்சிவ ஹிடியவத்த அல்லது கிலன்ய்தெகெவத்த ; கிழக்கில் : ஒலொக்குவயும் தற்போது மடம வெல்ல பாதையும் ; தெற்கேயும் மேற்கேயும் : வீதியும் எல்லைகளாக அமைந்த முப்பது தசம் ஏழு ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30.79பே.) விசாலமுடைய காணியின் மீண்டும் அளந்து அமைக்கப்பட்ட அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. டபிள்யு. பீ. சுனில் என்பவரால் 91 ஆம் இலக்கமும் 1998.03.28 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் எல்லைகளாக, வடக்கே : அபரன் பதிஞ்சிவ ஹிடியவத்த அல்லது கிலன்னய்தெகெவத்த வேறாக்கப்பட்ட வெளிச்சவீடு வீதி ; கிழக்கே : மடம்வெல்ல வீதி ; தெற்கே ; புமே பதிஞ்சிவத்த அல்லது பிடகொரடுவ அல்லது கெதரவத்த ; மேற்கே : சிங்ஹாசன வீதி என்ற எல்லைக்குள் அமைந்துள்ள துண்டு இலக்கம் 1 ஆக காட்டப்பட்டுள்ள இருபத்தாறு தசம் ஆறு ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 26.69பே.) விசாலமுடைய காணியும் அதிலமைந்துள்ள கட்டிடங்களும் மரம்செடி, பழவகை ஆகிய சகலதும் பூரணமாகவாகும். இக்காணி மாத்தறை காணிகள் பதிவு செய்யும் காரியாலயத்தில் பி/ 497/ 39 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,*

*முகாமையாளர்.*

*ருஹுுண அபிவிருத்தி வங்கி,*
*தலைமை அலுவலகம்,*
*மாத்தறை,*
*2002.08.07.*

*6-161*

---

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*கடன் கணக்கு இல. : 165334 - விதானகே பத்மரத்ன ஜயவர்தன, விதானகே அரிஸ்சந்திர ஜயவர்தன.*

*கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 10.08.2006 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டமொன்றில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-*

*"கடன் எடுத்த/ காணியை ஈடுவைத்த விதானகே பத்மரத்ன ஜயவர்தன மற்றும் விதானகே அறிஸ்சந்திர ஜயவர்தன என்பவர்கள் கொமர்ஷல் பேங்க ஒப் சிலோன் லிமிட்டெட் சார்பில் இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பி. டி. அபேவர்த்தனவின் 03.07.2003 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 2187 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவின் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறிமூலம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டுக்கு 07.07.2006 ஆந் திகதிவரை ரூபா 5,59,812.66 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் கீழ் அட்வணையில் விவரிக்கப்பட்ட சொல்லப்பட்ட*

முறிவு இலக்கம் 2187 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 5,59,812.66 வுடன். 08.07.2006 ஆந் திகதி முதல் ஏலத் திகதிவரை ரூபா 4,37,500 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 17% வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் (பணமாக செலுத்தியபின் கழித்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 இல் உரிமைபெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், மதபத்து அலக்கலம் கோரலயில் கொடக்கவெல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். எம். டி. எஸ். சாந்தவின் 08.08.1998 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1148 இல் காண்பிக்கப்பட்ட திப்பட்டுயேன அல்லது திப்பத்துயேன பாலகெல என்ற காணியின் பகுதிபடுத்திய காணித்துண்டின் எல்லைகள்- வடக்கு : மாதம்பே அம்பத்தொட்ட பிரதான வீதி ; கிழக்கு : குலந்துன்க ஜயவர்தனவின் காணி ; தெற்கு : தொம்பல்வெல தொல ; மேற்கு : தீரசிங்கவின் காணி. இக்காணியின் விஸ்தீரணம் 0ஏக்கர் 0றூட் 32.6 பேர்ச்சஸ் மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடம், தாவரங்கள் எல்லாம் சேர்த்து. இக்காணி இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் F354/50 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

6-248

---

### மக்கள் வங்கி - மகியங்கனை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2005.07.05 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது:-

"மக்கள் வங்கியின் சார்பில் பதுளை பிரசித்த நொத்தாரிசு திருமதி பி. பி. நாணயக்கார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.09.08 ஆந் திகதி கொண்ட இல. 1975 ஈட்டுமுறியின் தவணைக் கொடுப்பனவுகள் தமாராகுமாரி ரிதிமாலியத்த, ஏக்கநாயக்க முதியன்சேலாகே விநீதா குமாரி ஆகியோரால் தீர்க்கத் தவறியுள்ளமையாலும், சொல்லப்பட்ட இலக்கம் 1975 ஐக் கொண்ட ஈட்டுமுறியின் கீழ் இரண்டு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து தொளாயிரத்து அறுபது ரூபா (ரூபா 2,23,960) மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய பாக்கியாக இருப்பதாலும் சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது ரூபா (ரூபா 2,23,960)க்கு 2004.05.28 ஆந் திகதி முதல் நூற்றுக்கு பதினெட்டு தசம் ஐந்து (18.5%) வீத வட்டியும், ஏலவிற்பனைத் திகதிவரை மேலதிக வட்டியும், ஏலவிற்பனைச் செலவும் இடையே கொடுப்பனவுகள் எவையேனும் செய்யப்பட்டி ருப்பின் அவற்றைக் கழித்துக்கொண்டு சொல்லப்பட்ட இலக்கம் 1975 இன் கீழ் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை அதிகாரம்பெற்ற ஏலதாரர் திரு. டபிள்யூ. ஜயதிலக மூலம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின்கீழ் தமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை தீர்மானிக் கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மகியங்கன பிரதேச செயலகப் பிரிவு, பிந்தென்னபற்று, தம்பராவ கிராம அதிகாரப் பிரிவு தம்பராவையில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தின் கீழ் இருந்த நிலஅளவை இலக்கம் 56 டோப்போ (TOPO) வரைபடத்தில் லொட் இலக்கம் 366 1/2 எனவும் லொட் இலக்கம் 366 2/2 எனவும் அழைக்கப்படும் காணியில் லொட் இலக்கம் 366 1/2 என்ற வடக்கில் : லொட் இலக்கம் 330/327 ; கிழக்கில் : லொட் ,இலக்கம் 366- 2/2 ; தெற்கில் : லொட் இலக்கம் 372 ; மேற்கில் : லொட் இலக்கம் 365 உம் இலக்கம் 366- 2/2 என்ற வடக்கில் : லொட் இலக்கம் 327 ; கிழக்கில் : லொட், இலக்கம் 367 ; தெற்கில் : லொட் இலக்கம் 372 ; மேற்கில் : லொட் இலக்கம் 366- 1/2 ; என்ற எல்லைக்குள் அமைந்துள்ள இரண்டு ஏக்கர் ஒரு றூட் முப்பத்திரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ் (02ஏ. 01றூ.32.5 பே.) பரப்பைக் கொண்ட வரைபட இலக்கம் 5127 ஐக் கொண்ட காணி உட்பட அனைத்துமாகும்.

இது பதுளை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இல. எல். டீ. ஓ. 99/584 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
பதுளை.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
24 ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை.

6-215

---

### மக்கள் வங்கி-காலி பிரதான வீதி (169)

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி

என்னும் பிரிவின்கீழ் 2006.04.27 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"நந்தா பியற்றிஸ் தர்மலதா செனவிரத்ன, கல்ஹேன கமகே கஜமினி சந்திமா டயஸ் செனவிரத்ன, கல்ஹேன கமகே தியமினி சஹான் டயஸ் செனவிரத்ன ஆகியோர் மக்கள் வங்கியின் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சோமபால ஹொரதுகொட கமகே அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2004.12.20 ஆந் திகதிகொண்ட 685 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறியின்மீது ஒரு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,47,500) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ஒரு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,47,500) 2005.01.20 ஆந் திகதி முதல் ஏலவிற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 18.75%ப்படி மேலும் வட்டியையும் ஏலவிற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் எனும் பிரிவின்கீழ் அறவிடற்பாலனதான பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 685 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பி. ஆனந்த அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பற்று காலியின் நான்கு கிறவட்ஸ்களுக்குட்பட்ட உனவட்டுனயில் அமைந்துள்ளதும் ரூமஸ்ஸலந்த அல்லது போனா விஸ்டா அல்லது போனா விஸ்டா அனாதைமட வளவுகள் மற்றும் சுதர்ஷன என அழைக்கப்படுவதுமான காணியின் துண்டு 17 என அடையாளமிடப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. துண்டு 17 என்பதற்கு எல்லைகளாக – வடக்கில் : துண்டு 11 (12 அடி வீதி) ; கிழக்கில் : இதே காணியின் துண்டு 16 ; தெற்கில் : இதே காணியின் துண்டு 18 ; மேற்கில் : இதே காணியின் துண்டு 20 என்பன அமைந்துள்ளன. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. வீரசூரிய தயாரித்த 1993, யூன் 24 ஆம், 27 ஆம் திகதிகளைக் கொண்ட 191எ இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.). இது காலி மாவட்டக் காணிப்பதிவகத்தில் டீ 780/ 252 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி 191ஏ இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 11 என்பதிலும் அதன்மீதும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, டிக்சன் கீழ் வீதி,
காலி.

6-214

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.